நாங்கள் யார், நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம்

ஹார்ட் கிப்ட் பவுண்டேஷன் 501 (e) (3) ஒரு லாபமற்ற நிறுவனமாக இயங்கி வருகிறது. இருதய சிகிச்சை நிபுணர்கள், வாஸ்குலார் அறுவை சிகிச்சை, நிபுணர்கள் மற்றும் ஆர்வ ஊழியர்கள் தங்கள் வாழ்க்கையை இக்குழந்தைகளின் இலவச இருதய சிகிச்சைக்காக அற்பணித்துள்ளனர். இவ்வுலகத்தில் 5 ½ மில்லியன் குழந்தைகளுக்கு இருதய சிகிச்சை தேவை என்று புள்ளி விவரங்கள் படி தெரிந்த சோகத்திற்குரிய உண்மையாகும். இவ்வசதி குறைவினால் பல குழந்தைகள் தங்களின் வாழ்வை இழந்ததோடு மட்டுமல்லாமல் ஊனமாகவும் இருக்கின்றனர்.

எங்கள் தலைமை சிகிச்சையாளர் **திரு. டாக்டர் கென்னித் பாக்ஸ்** பல குழந்தைகளின் இருதயத்தை சீரமைப்பதின் மூலமாக பெற்றோர்களின் மனதில் தம் குழந்தைகள், நீண்ட நாள் நலமாக வாழ்வார்கள் என்ற தன்னம்பிக்கையையும், கனவை நினைவாக்கவும் வழி புரிகிறார். குழந்தைகளின் இருதய அறுவை சிகிச்சை ஒவ்வொரு கட்டத்திலும் கூட்டு முயற்சியுடன் இயங்கி வருகிறது, உலகில் பல உயர்தரமான நிறுவனங்களில் பயிற்சி பெற்று உயர்ந்த நிலை அடைந்த, எங்கள் சிகிச்சையாளர்கள் தங்கள் வாழ்வை குழந்தைகளின் நல்வாழ்வுக்காக அற்பணித்ததோடு மட்டுமல்லாமல் வெற்றியும் கண்டுள்ளனர்.

ஹார்ட் கிப்ட் ஒரு லாபமற்ற நிறுவனம் மட்டுமின்றி மிகவும் கவிவாற்றல் பெற்ற நிறுவனமாக இயங்கி வருகிறது. அங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிகிச்சைக்கு வரும் குழந்தைகளையும் உடன் வருபவர்களையும் மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கின்றனர். அவர்களுக்கு கூடுதல் வசதியாக, அவர்களை விமான நிலையத்திலிருந்து அழைத்து வருவது மட்டுமின்றி, அவர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பும் வரை, தங்கும் வசதி மற்றும் இதர வசதிகளையும் செய்து தருகின்றனர்.

ஹார்ட் கிப்ட் நிறுவனம் தனது சேவையை சிறியா, நைஜரீயா, பெலைஸ், கேம்ரூன், ஹாண்டுரஸ், பாலஸ்தீனம் மற்றும் மெக்ஸீகோ போன்ற நாடுகளில் செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் குறிக்கோள் உலகம் முழுவதும் தங்களின்

சேவையை விரிவாக்குவதே. இதை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் நோயாளிகள் தங்களின் அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்நிறுவனம் மேலும் பல குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க, பல ஆர்வ ஊழியர்கள் ஒன்று சேர்ந்து பல மேலை நாடுகளில் இருந்து மருத்துவ உதவி பெற்றுத் தர வேண்டும்.

நோயாளிகளுக்கு உண்டான நிபந்தனைகள்:

ஹார்ட் கிப்ட்டின் நோக்கமே, குழந்தைகளை நலமுடன் வாழ வைப்பது . இதற்காக அவர்கள் சில குறிப்பிட்ட நிபந்தனைகளை வைத்துள்ளனர்.

1. நோயாளியின் வயது 14 அல்லது அதை விட சிறியவர்களாக இருக்க வேண்டும்.
2. நோயாளிகளுக்கு குரோமசோம்களின் குறைபாடுகள் இருக்கக்கூடாது (உதாரணமாக எய்ட்ஸ், சிண்ட்ரோம் குறைவு போன்றவை இருக்ககூடாது)
3. பை ___ வெண்டிரிகுலார் (முதல் நிலை) பழுதடைந்த நோயாளிகளுக்கு மட்டுமே சரி செய்து தரப்படும்.
4. நோயாளிகளுக்கு தேவையான அளவு சிகிச்சை கிடைக்கும் வசதியுள்ள இடத்தில் வசிக்க வேண்டும்.

நோயாளிகளுக்கு தேவையான ஆலோசனைகள்:

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவராயிருப்பின், கீழ்கண்ட தகவல்கள் பூர்த்தி செய்யவும்.

அவசியமான தகவல்கள்.

1. குழந்தையின் முழுப் பெயர்.
2. பிறந்த தேதி
3. பாலினம்

4. சொந்த நாடு

5. தற்போதைய எக்கோகார்டியோகிராம் (கடந்த மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட சோனோகிராம் (வி.எச்.எஸ் / சி.டி. / டி.வி.டி.)

அவசியமான தகவல்கள்:

1. வாழும் சூழ்நிலை / சமுதாய வரலாறு (உதாரணமாக அவர்கள் பெற்றோர்களுடன் வசிக்கிறார்களா? அல்லது கூட பிறந்தவர்களுடன் வசிக்கிறார்களா ? குடும்ப மரபிலே இதய நோய் உண்டா?)

2. எய்ட்ஸ் / எச். ஐ.வி முடிவுகள்

3. ஆக்ஸிஜனின் அளவு

4. கடந்த காலத்தின் உடல் நிலை வரலாறு (அறுவை சிகிச்சை நடந்ததா? அப்படி இருக்குமாயின் எதற்காக நடந்தது ?)

மேற்கண்டவைகளை தவிர பிற விவரங்கள்:

1. அம்மை குத்தின இடத்தின் தகவல்கள்.

2. மார்பின் ஊடுகதிர் நிழற்மடம்.

3. குழந்தையின் புகைப்படம்.

மேற்கண்ட விவரங்களை பூர்த்தி செய்தவுடன் நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

தி ஹெல்த்கிப்ட் பவுண்டேஷன்

1010, மேற்கு, 40-வது தெரு

ஆஸ்டின், Tx 78756.